445—

மின்சாரத்திற்கு அளிக்கப்படும் வரிவிலக்கு

3674*—திரு. ஜி.பி. வெங்கிடு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சர்க்கரை ஆலை, காகித ஆலை மற்றும் சில இரசாயன ஆலைகளில் அவைகளாலேயே சுயமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு அளிக்கப்படும் வரிவிலக்கு புதியதாக உருவாகும் தொழிற்சாலைகளுக்கும் நீட்டிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காகிதம், இரசாயனம், சர்க்கரை மற்றும் துணி ஆலைகள், அவர்களாலேயே சுயமாக உற்பத்தி செய்து அவர்களாலேயே நுகரப்படும் மின்சாரத்திற்கு அளிக்கப்படும் மின்வரி விலக்கு இவ்வாறான புதிதாகத் தொடங்கும் தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்".

திரு. ஜி.பி. வெங்கிடு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 446, திரு. ஆ. ஜெ. மணிக்கண்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

446—

ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்குதல்

4582*—திரு. ஆ.ஜெ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், திருநாவலூர் ஒன்றிய ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்தவும், அதற்குப் புதிய கட்டிடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?